# 8 இயேசுவின் பிள்ளைப் பருவம்

## சிறுவன் இயேசு கோயிலுக்குச் செல்லுதல்

யூத வழக்கப்படி இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவுக்காக ஆண்டு தோறும் எருசலேமுக்குச் செல்வார்கள். அவ்வாறே இயேசுவுக்கு பன்னிரெண்டு வயது ஆனபோது மரியாள்,யோசேப்பு, சிறுவன் இயேசு, உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எருசலேம் சென்றார்கள். பாஸ்கா விழா முடிந்த பின் மரியாளும் யோசேப்பும் திரும்பிச் சென்றார்கள். ஆனால் சிறுவன் இயேசு எருசலேமில் தங்கிவிட்டார்.

இதனையறியாத பெற்றோர் சிறுவன் இயேசுவை தமது உறவினர்கள் நண்பர்களிடையே தேடினார்கள். அவரைக் காணாததால் மீண்டும் எருசலேம் நோக்கிச் சென்றார்கள். மூன்று நாட்களுக்குப் பின் மரியாளும் யோசேப்பும் எருசலேமையடைந்தார்கள். கோவிலில் சிறுவன் இயேசு போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருப்பதையும் கண்டார்கள்.



*படம் 8.1 - கோவிலில் சிறுவன் இயேசு*

மரியாள் : மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ, பார். உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே.

சிறுவன் இயேசு : நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?

சிறுவன் இயேசு சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மரியாள் இவற்றையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். இயேசு இவ்வுலகிற்கு மீட்புப் பணியை செயற்படுத்துவதற்காகவே வந்தார். பிள்ளைப் பருவத்திலிருந்தே இயேசு, தன் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்வந்தார். கிறிஸ்தவப் பிள்ளைகளாகிய நாமும் கடவுளை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கான அழைப்பைப் பெற்றுள்ளோம். அவ்வழைப்பிற்கேற்ப பிள்ளைப் பருவத்திலிருந்தே சிறுவர்களாகிய நாம் முன்வர வேண்டும். இதற்காக சிறுவன் இயேசுவின் வாழ்வை முன்மாதிரிகையாகக் கொள்ள வேண்டும்.

கோவிலில் தங்கிய இயேசுவைத் தேடி மரியாளும் யோசேப்பும் சென்ற நிகழ்வானது, பெற்றோர் தம் பிள்ளைகள் மட்டில் விழிப்பாய் இருக்க வேண்டும் என்பதற்கு மாதிரிகையாக இருக்கிறது.

## இயேசுவின் வளர்ச்சி

பிள்ளைப் பருவத்திலே இயேசு வளர்ச்சி பெற்ற விதத்தை புனித லூக்கா இவ்வாறு காட்டுகிறார்.

> அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார்........... இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.
>
> (லூக் 2 :51-52)

ஞானத்தில் (மனம்)

உடல் வலிமையில் (உடல்)

இயேசு வளர்ச்சி பெற்ற விதம் (ஆளுமையில் வளர்தல்)

கடவுளுக்கு உகந்தவராக (ஆன்மீகம்)

மனிதருக்கு உகந்தவராக (சமூகம்)

இயேசு சிறுவயதிலிருந்தே இறைசித்தத்திற்குக் கீழ்ப்படிந்து நற்பண்புகளில் வளர்ச்சி பெற்றார் என்பதை புனித லூக்கா குறிப்பிடுகின்றார். இயேசு தனது பிள்ளைப் பருவத்தில் கோவிலில் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டார், கேள்விகளை எழுப்பினார். இந்நிகழ்விலிருந்து இயேசு ஞானத்தில் வளர்ச்சி பெற்றார் என்பதைப் பார்க்கிறோம். இயேசு இறைமகனாக இருந்த போதிலும் வீட்டிலே தனது பெற்றோருக்குக் கீழ்படிந்தார்; உதவி செய்தார். இவ்வாறாக அவர் உடல் வலிமை பெற்றார்.

இயேசு தனது பெற்றோருடன் இணைந்து மறை காரியங்களில் ஈடுபட்டார், செப வாழ்வில் வளர்ந்தார்.

உதாரணம் :- இயேசுவை அவரது பெற்றோர் கோவிலில் அர்ப்பணிப்பதற்காக எருசலேம் ஆலயத்திற்குக் கொண்டு சென்றனர். பன்னிரெண்டு வயதில் பாஸ்கா விழாவுக்கு எருசலேம் சென்றார். பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்தார், சமூக சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்தார் என இவற்றின் வழியாக இயேசு வின் ஆளுமையை புனித லூக்கா படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இவை இயேசு கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந் தார் என்பதை எமக்கு அறியத் தருகின்றன. இயேசுவைப் போல் நாமும் ஆளுமையில் வளர்ச்சிபெற உடல், உள, ஆன்மீக, சமூக ரீதியாக வளர்ச்சியடைய வேண்டும்.

ஊட்டச் சத்துள்ள உணவுகளை உட் கொண்டும் விளையாட்டு, உடல் பயிற்சிகளில் ஈடுபட்டும் உடல் வளர்ச்சியை பெற்றுக் கொள்ளலாம்.

செப வாழ்வு, மறை பக்தி முயற்சி களில் ஈடுபட்டும் ஆன்மீக வளர்ச்சி யைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாம் வாழும் சமூகத்தில் (வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில், கிராமத்தில், நகரில்) அர்ப்பணிப் புடன் பணியாற்றுவதன்மூலம் சமூக வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சிறப்பாக சிறுவன் இயேசுவின் வாழ்வை முன்மாதிரிகையாகக் கொண்டு எமது குடும்பத்தில் ஒன்றுபட்டு செயலாற்றுதல், பாடசாலையில், கிராமத்தில் சிரமதானத்தின்போது ஒத்துழைத்தல், ஆலயப் பணிகளில் துணை புரிதல் ஆகியவற்றை எம்மால் செய்ய முடியும். சமூகத்திற்கு இயன்றவரை பணியாற்றி நாமும் இயேசுவைப்போல் உடல், உள, ஆன்மீக, சமூக ரீதியாக வளர்ச்சி பெற வேண்டும்.

## செயற்பாடு

1. (i) உடல், (ii) உள, (iii)ஆன்மீக, (iv) சமூக ரீதியில் வளர்ச்சி பெறும் முறை பற்றி இவ்விரண்டு வசனம் எழுதுக.
2. உம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய நற் பண்புகள் மூன்றை எழுதுக.
3. பன்னிரெண்டு வயதில் சிறுவன் இயேசு எந்த விழாவைக் கொண்டாடுவதற்காக எருசலேமுக்கு பெற்றோருடன் சென்றார்?
4. சிறுவன் இயேசு பன்னிரெண்டு வயதில் எருசலேம் ஆலயத்தில் தங்கியிருந்ததன் காரணம் என்ன?
5. ''நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள் நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா'' - இக்கூற்றின் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளும் செய்தி என்ன?
6. சிறுவன் இயேசுவின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் மூன்றை எழுதுக.



***வாழ்க்கைக்கு.....***

- ★ *சிறுவன் இயேசுவை எப்போதும் வாழ்வின் முன்மாதிரிகையாகக் கொள்ளுங்கள்.*
- ★ *உங்களின் நன்மைக்காக வளர்ந்தோர் வழங்கும் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். அதன்படி வாழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.*
- ★ *இயேசுவின் பிள்ளைப் பருவத்தைப் பற்றி எழுதியுள்ள சித்திரக் கதைகளை வாசியுங்கள்.*